## இயல் 6.7 - அளவைகள்


பயிற்சி எண் :: 6.7.2.3.G

அளவைகள் -
நேரத்தைக் கணக்கிடும் முறைகள் [ த.நா.அ.பு பயிற்சி 2.3.9 ]


## அளவைகள் - நேரத்தைக் கணக்கிடும் முறைகள் [ த.நா.அ.பு பயிற்சி 2.3.9 ]

பூங்கோதை முற்பகல் 5:20 மணிக்குத் துயில் எழுந்து 35 நிமிடங்கள் தன்னைத் தயார் செய்து கொண்டு, 15 நிமிடத்தில் தொடர் வண்டி நிலையத்தை அடைந்தார். தொடர் வண்டி சரியாக முற்பகல் 6 மணிக்குப் புறப்பட்டுச் சென்றது எனில் பூங்கோதை அந்தத் தொடர் வண்டியில் பயணம் செய்திருப்பாரா?

பூங்கோதை தொடர் வண்டி நிலையத்தை அடைந்த நேரம்




நிலையத்திலிருந்து தொடர் வண்டி புறப்பட்டுச் சென்ற நேரம்




பூங்கோதை எழுந்த நேரம் ⇒ 5.20 மு.ப

அவள் தயாராக எடுத்துக்கொண்ட நேரம் ⇒ 35 நிமிடம்

தொடர்வண்டி நிலையத்தை அடைய அவள் எடுத்துக்கொண்ட நேரம் ⇒ 15 நிமிடம்

அவ்வாறெனில் பூங்கோதை தொடர்வண்டி நிலையத்தை அடைந்த நேரம் ⇒ 5:20 மு.ப + 35 நிமிடம் + 15 நிமிடம்

= 6:10 மு.ப

பூங்கோதை தொடர்வண்டி நிலையத்தை அடைந்த நேரம் - 6:10 மு.ப.
ஆனால் தொடர்வண்டி கிளம்பிச்சென்ற நேரம் - 6:00 மு.ப. ஆகவே,
பூங்கோதையால் அந்தத் தொடர்வண்டியில் பயணம் செய்திருக்க வாய்ப்பில்லை.

**Information, Rights & Disclaimers** :: Sum & solution prepared on Saturday 27th November, 2021 :: 08:09 Hrs. All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Read :: 4/16/2020 dt. January 31, 2020. https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**